DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 176/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்புராஜ் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : உத்திரப்பன் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.08.2024

**முதல் விசாரணை**

நான் உடுமலை அரசு கலை கல்லூரி அருகில் வசித்து வருகிறேன். உடுமலை ராஜேந்திரா சாலையில் உன்ன அரசு மேல்நிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். அயல் பணி காரணமாக உடுமலை சிவசக்தி காலணியில் உள்ள அரசு உயர் நிலைப் பள்ளியில் தற்போது வேலை செய்து வருகிறேன். நானும் ஆஜர் எதிரியும் சுமூகமாக பேசி கொண்டு சமாதானம் அடைந்து விட்டோம். அதற்காக சமாதான மனுவும் தாக்கல் செய்துள்ளோம். அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன். கடந்த 10.11.2018 ம் தேதி 3 வது பாடவேளையில் நான் 7 ம் வகுப்புக்கு கணக்கு சம்பந்தமாக பாடம் நடத்தி வந்த போது மாணவர்களுடன் அமர்ந்து பேசி கொண்டிருந்தபோது எனது தலைமை ஆசிரியரின நண்பர் ஆர பழனிசாமி எனபவர் பள்ளி வளாகத்தில் சத்தம் போட்டு கொண்டிருந்தார். ஒருமையில் பேசி கொண்டிருந்தார். அவர் என்னை தான் சத்தம் போடுகிறோர் என்றும், ஒருமையில் பேசி கொண்டிருக்கிறார் என்றும், சந்தேகத்தில் அடிப்படையில் எனது பள்ளி கல்வி துறைக்கும் தலைமை ஆசிரியருக்கும் உயர் அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவித்து எனது அரசு

பணிக்கு உந்தகம் ஏற்பட கூடாது என நினைத்து சந்தேகத்தின் அடிப்படையில் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில புகார் கொடுத்திருந்தேன். அதனை உடுமலை போலிசார் வழக்கை எடுத்து கொண்டு என்னை விசாரணை செய்தார்கள். விசாரணையில் இதையே தான கூறினேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் பற்றி தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

**சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 10.11.2018 ம் தேதி 7 ம் வகுப்பிற்கு கணக்கு வகுப்பு சம்பந்தமாக மாணவர்களுடன் பேசி கொண்டிருந்தேன் என்றும் , ஆஜர் எதிரி என் வகுப்பிற்குள் வந்து வெள்ளை சாமி HM எங்கே என்று கேட்டார் என்றும் நான் அலுவலகம் சென்று கேளுங்கள் என்றும், அதற்கு அவர் என்னை ஒருமையில் பேசினார் என்றும், அருகிலிருந்த ஆங்கில ஆசிரியர் ராம செல்வம், தலைமை ஆசிரியர் ஆகியோர் என்னிட்ம வந்து பேசினார்கள் என்றும ஆஜர் எதிரி வண்டியை எடுத்து செவளியே செல்லும போது போட்டோ பிடித்தேன் என்றும அப்போது வெளியில் வா உன்னை உண்டு இல்லை என்று மிரட்டி சென்றார் என்றும், செயற்கை பாலியல் புகாரை சிக்கவைக்க நினைத்தார் என்றும், அதற்காக எனது பணிப்பாதுகாப்பிற்கு வேண்டி எழுத்து மூலமான புகாரை கொடுததுவிட்டு தற்சமயம் ஆஜர் எதிரியுடம் சமாதானம் ஆகிவிட்ட படியால் புகாரில் உள்ள விவரங்கள் பற்றி ஞாபகம் இல்லை என்று எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.